☎ 04175 - 236654 / 235295

# SHANMUGA INDUSTRIES ARTS & SCIENCE COLLEGE (Co-Ed)

Certified Under Section 2 (f) & 12 B of UGC Act 1956, An ISO 9001 - 2015 Certified Institution

Permanently Affiliated to Thiruvalluvar University, Vellore and Approved by the Govt. of Tamil nadu & AICTE, New Delhi

Manalurpet Road, Tiruvannamalai - 606 603, shanmugacollege@gmail.com www.shanmugacollege.edu.in

29.09.2022

## சண்முகா தொழிற்சாலை கலை அறிவியல் கல்லூரியில் நம்ம ஊரு சூப்பரு - விழிப்புணர்வு நிகழ்ச்சி

சண்முகா தொழிற்சாலை கலை அறிவியல் கல்லூரியின், நாட்டு நலப்பணித்திட்டம் (NSS), தூய்மை பாரத இயக்கம் (ஊரகம்) மற்றும் நம்ம ஊரு சூப்பரு இணைந்து விழிப்புணர்வு நிகழ்ச்சி நடத்தியது.

இந்நிகழ்ச்சியில் கல்லூரியின் செயலர் மற்றும் தாளாளர் **டி.ஏ.எஸ்.முத்து** தலைமை வகித்தார். பொருளாளர் **எம்.சீனுவாசன்** முன்னிலை வகித்தார். கல்விப்புல முதன்மையர் பேரா.**அழ..உடையப்பன்** தொடக்க உரையாற்றினார். முதல்வர் முனைவர் **கே.ஆனந்தராஜ்** அனைவரையும் வரவேற்றார். தமிழ்த்துறைப் பேராசிரியர் **செ.பிரபு** நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் **மரியதேவ் ஆனந்த்** (கிராம ஊராட்சி), **டி.பரமேஸ்வரன்** (வட்டார ஊராட்சி), மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர் **எம்.வெங்கடேசன்**, மாவட்ட ஒருங்கிணைப்பாளர் திருமதி.**இராணி**, வட்டார ஒருங்கிணைப்பாளர் **எஸ்.மூர்த்தி**, மேலத்திக்கான் ஊராட்சி செயலாளர் **கோபால்** உள்ளிட்டோர் கலந்து கொண்டு மாணவர்களிடம் மரம் வளர்த்தல், வளாகத்தூய்மை, நெகிழி இல்லா ஊர், சுத்தமான தண்ணீர், தூய்மையான காற்று, மக்கும் குப்பை மற்றும் மக்கா குப்பைகளை எவ்வாறு பிரித்தெடுத்து மறுசுழற்சி செய்வதென விளக்கிக் கூறினார்கள். பின்னர், விழிப்புணர்வை முன்னிட்டு மாணவர்களைக் கொண்டு கல்லூரி வளாகத்தில் மரக்கன்றுகள் நடப்பன.

இந்நிகழ்ச்சியின் நிறைவாக நாட்டுநலப்பணித்திட்ட ஒருங்கிணைப்பாளர் **டி.அருண்குமார்** நன்றியுரையாற்றினார். துறைத்தலைவர்கள், இருபால் பேராசிரியர்கள், அலுவலகப் பணியாளர்கள், மாணவ, மாணவியர்கள் கலந்து கொண்டனர்.

செயலர் தாளாளர்



நாட்டு நலப்பணித் திட்டம்
Hi Seva - 2022